# NEWS LETTER


Contact Us !

Main Road,Puthukudiyiruppu (30158), Batticaloa, Sri Lanka.

Phone : +94 653125555 | +94 777105569
WhatsApp / Viber: +94 77 677 0780

Email : vivekananda.cflk@gmail.com
www.vcf.lk

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569


V i v e k a n a n d a   C o m m u n i t y   F o u n d a t i o n




## காரைதீவில் கணினி கற்றல் கூடம்



கணினி கற்றல் கூடமானது உலகளாவிய இராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷன்களின் துணைத்தலைவர் அதிவணக்கத்திற்குரிய ஸ்ரீமத் சுவாமி சுஹிதானந்தஜி மஹராஜ் அவர்களின் காரைதீவு விஜயத்துடனும் 8 இற்கும் மேற்பட்ட இராமகிருஷ்ண மிஷன் துறவிகளின் ஆசீர்வாதத்துடன் அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு இராமகிருஸ்ண மிஷன் மனித மேம்பாட்டு பயிற்சிநிலையத்துடன் இணைந்த கணினி கற்றல் கூடம் மிகவும் சிறப்பாக (VCOT Computer Learning Unit) திறந்து வைக்கப்பட்டுள்ளது.



இச் செயற்பாட்டிற்கான நிதியுதவியினை வழங்கிக்கொண்டிருக்கும் மனித நேய நிதியத்தின் தலைவர் திருமதி.அபிராமி கயிலாசபிள்ளை மற்றும் பொருளாளர் திரு.கயிலாசபிள்ளை அரவிந்தன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது

# மாதம் ஒரு களம்



மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் மாதர் அபிவிருத்தி சங்கத்தின் பயிற்சி நிலையத்தில் பயிலும் 20 பெண்களுக்கான விசேட தொழிற்திறன் மேம்பாட்டு பயிற்சி செயலமர்வானது மாதர் அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஒழுங்கமைப்பின் கீழ் விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் வளவாளர்களும் இணைந்து சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது.

பயிற்சியின் பின்னரான சுயதொழில் மற்றும் தொழில்வாய்ப்பினை பெறத்தக்க வழிகாட்டலுடன் பயிற்சியின் முக்கியத்துவம் பற்றிய தெளிவூட்டல் வழங்கப்பட்டதோடு, அவர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்த பொது சந்தைகளில் விற்பனை செய்வது, சமூக வலைத்தளங்கள் மூலம் விளம்பரம் செய்வது, சுயதொழில் ஆரம்பிப்பதற்கான செயன்முறைகள், அதற்கான விசேட திறன்கள் பற்றிய விளக்கங்கள் வழங்கப்பட்டது.




## மாணவர்களுக்கான அப்பியாசப் புத்தகங்கள்

பின்தள்ளப்பட்ட கிராமங்களிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்விக்கு வறுமை ஒரு தடையாகி விடக் கூடாது என்னும் தொனிப்பொருளில் வருடாந்தம் பல்வேறு செயற்றிட்டங்களை எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பத்தைச் சேர்ந்த 03 மாணவர்களுக்கான அப்பியாசப் புத்தகங்கள் வழங்கி வைக்கப்பட்டது.



விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியானது க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடையாதவர்களுக்காவும் உயர்தரம் சித்தியடைந்து பல்கலைக்கழக வாய்ப்பினைத் தவறவிட்டவர்களுக்காகவும் விசேடமான பயிற்சிகளாக வாழ்வியலும் வழிகாட்டலும், பயிற்சிநெறியானது கொம்மாதுறைக் கிளையில் ஆரம்பிக்கப்பட்டது. காலத்தின் தேவைக்கேற்ற வகையில் அதனை பல்வேறு இடங்களில் நடைமுறைப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.




மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மட்டுமன்றி அவர்களின் திறமைக்கு ஓர் அங்கீகாரம் வழங்கும் நோக்கில் மட்/மாவிலங்கன்துறை விக்னேஸ்வரா வித்தியால பாடசாலையில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றும் மாணவர்களை கௌரவிக்கும் முகமாக கேடயங்கள் மற்றும் வெற்றிக் கிண்ணங்கள் பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கு அமைவாக வழங்கி வைக்கப்பட்டது. இதன் மூலமாக விளையாட்டுத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களை ஊக்கவிப்பதே எமது நோக்கமாகும்.





வறுமை நிலையில் தாய், தந்தையை இழந்த, குடும்ப வருமானம் மிகவும் குறைவாக உள்ள குடும்பத்தில் பாடசாலைக் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு கற்றலுக்கான மாதாந்த கொடுப்பனவு வழங்குவதன் மூலம் மாணவர்களின் வலுவூட்டலுக்கான செயற்பாடுகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம். அந்த வகையில், மாணவர்களைப் பொறுப்பெடுக்கும் திட்டத்தில் மேலும் 02 மாணவர்கள் பொறுப்பெடுக்கப்பட்டு அவர்களுக்கான முதற்கட்ட தொகை வழங்கிவைக்கப்பட்டது.



**Sponsor a Student**

**per Month – LKR 3,500**

அவ்வாறே எமது திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டு உதவித்தொகை பெற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கான களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது.

விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியானது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையுடன் இணைந்து வருடாந்தம் கா.பொ.த உயர்தரம் மற்றும் க.பொ.த சாதாரணதரம் பயிலும் மாணவர்களுக்கான கருத்தரங்கு நடாத்தப்பட்ட வருகின்றது. அந்த வகையில் களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள Brilliant A+ College இன் வேண்டுகோளுக்கு அமைவாக 2025 கா.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் 600 மாணவர்களுக்கான கருத்தரங்கானது சிறப்பாக நடாத்தப்பட்டது.





விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் மாதாந்தம் விசேட உணவு வழங்குதலை முன்னெடுத்து வருகின்றது.

- அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
- மயிலம்பாவெளி வாழும்கலை நம்பிக்கை நிதியம்
- நந்தவனம் முதியோர் இல்லம்
- புகலிடம் (சத்துணவுப் பொதிகள்)

இவ்வாறு எமது சிறுவர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு நீங்களும் உங்களால் முடிந்த உதவியை வழங்குவதன் மூலம் எமது சமூக வலுவூட்டலில் பங்களிப்பை மேற்கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

## Donation – Request details

**Annai Sri Sarada Center**

**Special Meal per Day - LKR 40,000**

**Sponsor a Pre-School**

**per Month - LKR 65,000**

**Nutritious Food per Child - LKR 3,000**

**Jeevananda Girls Home**

**Special Meal per Day - LKR 20,000**

**Nandavanam Elders Home**

**Special Meal per Day - LKR 15,000**

**Sponsor a Youth**

**per Technician - LKR 10,000**

**Sponsor a Student**

**per Month - LKR 3,500**

**Nutrion Pack for Pugalidam Disables Center**

**per Pack - LKR 3,500**

**Education Materials For School students**

**per Pack - LKR 5,000**